**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C No. 228 /2009**

2023– வருடம் பிப்ரவரி மாதம் 23–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் (அ.சா.–2 ) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | | வயது | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலுகா | : | | நாள் | : 23.2.2023 |
| மாவட்டம் | : | | | |

1-ம் எதிரி – நடராஜன் ஆஜர்.

2–ம் எதிரி – குமார் என்ற கிருஷ்ண குமார் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் சின்ன கலையத்துார் V.K. மில்ஸ்ல் வசிக்கிறேன். முன்பு அந்த மில்லில் வேலை பார்த்தேன். தற்போது விவசாயம் செய்கிறேன். அ.சா.–1 செல்வம் என்பவரைத் தெரியும். எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியும். 30.4.2004–ம் தேதி அதிகாலை சுமார் 4.45 மணியிலிருந்து 5 மணிக்குள் நானும் மாரியப்பனும் சொந்த வேலையாக சைக்கிளில் பழனிக்கு சென்றோம். அப்போது பெத்தநாயக்கன்பட்டி பிரிவில் வந்த போது அங்கு ரோட்டில் மேற்கு நோக்கி TN 28 Y 1967 என்ற பதிவெண் கொண்ட லாரி நின்று கொண்டிருந்தது. அப்போது அந்த லாரியின் டிரைவரிடமும் இன்னொரு டிரைவரிடமும் எதிரிகள் இருவரும் பணம் கேட்டு அவர்களை எதிரிகள் அடித்து காயப்படுத்தி கொண்டிருந்தார்கள். நான் சைக்கிளை நிறுத்தி விட்டு நானும் மாரியப்பனும் அருகில் சென்றோம். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் இருவரும் கையில் அரிவாள் போன்ற ஆயுதத்துடன் ஓடி விட்டார்கள். லாரி டிரைவரிடம் கேட்ட போது எதிரிகள் தன்னை அடித்து விட்டு பணத்தை பிடிங்கிக் கொண்டு ஓடி விட்டதாக சொன்னார். அவர்கள் 29.4.2004 தேதி இரவு 10 மணிக்கு துாத்துக்குடியிலிருந்து மடத்துக்குளம் பேப்பர் மில்லிற்கு போவதற்காக லாரியை எடுத்துக் கொண்டு வந்ததாகவும் அந்த இடத்தில் லாரியை நிறுத்தி விட்டு இயற்கை உபாதை கழிப்பதற்காக நிறுத்தயிருந்த போது எதிரிகள் அங்கு வந்து அவர்களிடம் பணம் கேட்டு மிரட்டியதாகவும் சொன்னார். அந்த டிரைவருக்கு உதடுகளிலும், வலது காலிலும், கையிலும் ரத்தக் காயம் இருந்தது. அந்த டிரைவர் போலீசில் புகார் கொடுக்க சென்றார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை :

சம்பவ நேரம் நான் கூலி வேலை பார்த்தேன். சம்பவயிடம் இருட்டான பகுதி என்றால் அருகில் ஒரு லைட் எரிந்து கொண்டிருந்தது. நாங்கள் இருந்த இடம் கொஞ்சம் இருட்டாக இருந்தது. இருட்டில் ஆட்களை சரியாக பார்க்கமுடியவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள். என்னை காவல் நிலையத்தில் விசாரித்த போது எதிரிகளை காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்கள். அப்போது போலீசார் சொன்னதை வைத்து எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக எனக்குத் தெரியும். எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் போலீசார் சொல்லிக் கொடுத்ததை வைத்து எதிரிகள் சம்பத்தில் ஈடுபட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு மறுநாள் மாலையில் போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள். போலீசார் சம்பவயிடத்தை பார்வையிடவில்லை என்றும் அவர்கள் என்னை அழைக்கும் போது நான் சாட்சி சொல்ல சென்றால் போதும் என்று சொல்லி என்னை அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். நான் சொல்லும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.02.23 14:51:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.